# தமிழ் இலக்கியங்களில் ஈதலறம்

**முனைவர்.ம.கீதா**
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோயம்புத்தூர் - 641 043.

காலந்தோறும் மானுட வாழ்க்கையைச் செம்மைப்படுத்தக் கூடிய நிலைகலன்களாக இலக்கியங்கள் விளங்குகின்றன. 'அரிதுஅரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பார் ஔவை மூதாட்டி. அத்தகைய மகத்தான மனிதப் பிறவியிலே மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு சில நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். அறம் யாவர்க்கும் உரியது. வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் கடைபிடிக்க வேண்டிய நன்னெறியாகும். மக்கள் சமுதாயத்தில் தம்பொறுப்பை உணர்ந்து செயல்படவேண்டும். கணவனும் மனைவியும் இனிதாக நடத்துகின்ற இல்லறத்தில் நல்லறங்கள் இயற்றப்பெறல் வேண்டும். இல்லறத்தில் வாழும் ஒருவன் தேடிய பொருளை குடும்பத்தார்க்கும், சமுதாயத்தில் உள்ளவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து, தானும் உண்பதுடன் அச்சமுதாய மக்களிடையே நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முறையே இல்லறநெறிகள் எனப்படும். பிறருக்கு உதவவேண்டும் என்பதே சான்றோர் பண்டு கண்டநெறி தமிழர்களின் சிறந்த பண்புகளில் ஒன்று ஈதலறமாகும். அதைப்பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறம் - விளக்கம்:**

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் அறத்தை முன் நிறுத்துவனவாகவே அமைகின்றன. மனம், மொழி, மெய்களால் நற்செயல் புரிதலே பண்டைகாலத்தில் அறம் எனப்பட்டது. அறம் என்பதற்கு கையறம், தருமம், நீர்மை, நூற்பயன்,பெரியாரியல் எனும் நூற்பொருட்களை கதிரைவேற்பிள்ளையின் தமிழ் அகராதி கூறுகிறது. தேர்ந்த அறிவுடன் சிந்தித்து சுயேச்சயாய் தீர்மானித்த திருப்பத்துடன், சந்தர்ப்ப சக்தியால் இடையூறுகளையும், எதிர்ப்புகளையும் வென்று எடுத்த காரியத்தை முடிப்பதுதான் அறச்செயல் என்று கலைக்களஞ்சியம் பொருள் கூறுகிறது.

**அறத்தின் வகைகள்:**

அறம் என்பதை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பிரிக்கலாம். இல்லறம் என்பது கொடுத்தலும் அளித்தலும்,கோடலும், இன்மையும், ஒழுக்கம், புணர்தல், புணர்ந்தோர்க்குப் பேணல் இன்னும் பிறவாகும். துறவறம் என்பது துறவும், அடக்கமும், தூய்மையும், தவமும், அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும் என இன்னும் பிற துறவறம் ஆகும். அறம் அறக்கடவுள், மனத்தூய்மை, சொல்தூய்மை, ஒழுகல், நன்மை, நற்செயல், நீதி வழங்கும் முறை, பகுத்துண்டல்,**வேததர்மம்,** காரணகாரியம், வாய்மை, நூல், அரசமுறை அறம், அறத்தொடு நிற்றல், உடன்போக்கு, இல்லறம், அறநெறி உடையவர், அறவோர், அறப்பண்பு, அறக்கிழவன்,**வேததர்மம்,காரணகாரியம்,**புகழும் பயனும்,பார்ப்போர்க்கு அளித்தல் அறஉபாதை, அறப்பயன், வாய்மை, கொல்லாமை, அறநுணுக்கம், பாவம் மறுமைக்கும் உறுப்பு, உலக வழக்கு, நீதிநூல் என முப்பத்திரண்டு வகைப்படும்.

**ஈதல், ஏற்றல் - விளக்கம்:**

'ஈதல்' என்னும் சொல்லிற்குக் கொடுத்தல், அருளல், இடுதல், உதவுதல் படிப்பித்தல் என்று கழகத் தமிழ் அகராதி பொருளுரைக்கிறது. 'ஏற்றல்' என்னும் சொல்லிற்கு இசைவாதல், இணங்கல், இரத்தல், உணர்த்தல், எழுப்பல், ஏற்றுதல், எறிதல், ஏந்தல், நடத்தல், பொருந்தச் செய்தல் என்னும் பதினொரு பொருள்களைக் கழகத் தமிழகராதி கூறுகியது. எனவே 'ஈதல்' என்பது ஒருவருக்குக் கொடுத்தலையும் ஏற்றல் என்பது இரத்தலையும் சுட்டுவதாய் அமைகிறது.

**தொல்காப்பியத்தில் ஈதலும் ஏற்றலும்:**

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் கொடுத்தல் யார் யாருக்குரியன என்றும் பெற்றுக்கொள்ளல் யாருக்குரியன என்றும் குறிப்பிடுகின்றது.

**"அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்"**
(தொல்-புறம்-நூ.74)

என்ற நூற்பாவில் 'ஈதல்' பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகையோருக்கும் உரியதாகக் கூறி,'ஏற்றல்' அந்தணர்க்கு உரியதாகச் சொல்கிறார்.

ஈதல் என்ற சொல்லைப் பயன்படுத்தாத தொல்காப்பியர் அதற்கு மாறாக ஈ,தா, கொடு என்ற மூன்று சொற்களை வேறுபட்ட தன்மையில் பயன்படுத்தியுள்ளார்.

**"ஈதா கொடு எனக் கிளக்கும் மூன்றும்**
**இரவின் கிளவி ஆகிடன் உடைத்தே"** (தொல்.எச்ச.நூ.927)

என்றும், இப்படி மூன்று சொற்களுக்கும் விளக்கம் தரவந்த நிலையில் மீண்டும்,

**"ஈயென் கிளவி இழிந்தோன் கூற்றே**
**தாயென் கிளவி ஒப்போன் கூற்றே**
**கொடுயென் கிளவி உயர்ந்தோன் கூற்றே"**
(தொல்.எச்ச.நூ.928)

என்று மூன்று நிலைகளிலும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

**ஈதலுக்குரியவர்கள்:**

முன்னர்கள், வள்ளல்கள், பெருநிலக்கிழார்கள், வீரர்கள், ஐந்நில மக்கள், மனையுறை மகளிர் போன்றவர்கள் ஈகைக் குணமுடையவராய்த் திகழ்ந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**திருக்குறள் காட்டும் ஈதலறம்:**

திருவள்ளுவர் வாக்குப்படி இல்லறம், துறவறம் என இரண்டுமே அறத்தின் கண் சார்ந்தது. இன்றைய சூழ்நிலைப்படி பசிப்பிணிபோக்கல், இனிய சொற்களைக் கூறல், பிற உயிர்களைத் துன்புறுத்தாது இருத்தல் போன்றவை அறச்செயலாக எடுத்துக்கொள்ளலாம். அறமே வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும், செல்வத்தையும் தரும். ஆகையால் அறத்தைவிட உயிர்க்கு ஆக்கமானது வேறு எதுவுமில்லை என்கிறார். பிறருடைய துன்பங்களைப் போக்கி அவர்கள் துன்பமுற்றவுடன் விரைந்து வந்து உதவி செய்வதே ஈகையாகும். அவர்கள் நம்மிடம் கேட்காத நிலையில் நாமே மனமுவந்து ஈவதே ஈகையாகும்.

தன்னலம் என்ற ஒன்றிற்கு அப்பாற்பட்டு, காலம், இடம், உலகநிலை இவைகளுக்கேற்ற முறையில் அறம் செய்வதே ஈகையாகும்.

'ஈகை' என்ற சொல்லுக்கு பரிமேலழகர் 'வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல்' என்று பொருள் தருகிறார். மேலும் விளக்கம் கூறும்போது இது மறுமை நோக்கியது ஆதலின் இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது என்று கூறுகிறார். 'ஈதல் இசைபட வாழ்தல்' என்று கூறிய வள்ளுவர் வறியவர்களுக்கு தருவதே ஈகை, மற்ற கொடையெல்லாம் குறியெதிர்ப்பை உடையது என்பதை,

**"வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்**
**குறி எதிர்ப்பை நீரது உடைத்து"** (குறள்-221)

என்ற குறள் மூலம் விளக்குகிறார். மேலும், மேலுலகம் இல்லையென்றாலும் ஈதல் நன்று, இரத்தல் இழிவைத் தருமென்றும் கொடுக்கின்ற உயர் குணமானது, நல்ல குடியில் பிறந்தவர்களிடம் தான் இருக்கும் என்பதை,

**"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலன் உடையான் கண்ணே உள"** (குறள்-223)

என்ற குறளின் மூலம் உணர்த்துகிறார்.

இரத்தவர் இன்முகம் காணும் அளவு, மனநிறைவு கொள்ளும் வகையில் ஈதலே ஈகையாகும். வலிமையுடையவர்களுடைய வலிமை, பசியை ஆற்றுதல், ஆனால் அந்தப்பசியை ஆற்றுவார் யாரோ அவரே வலிமையுடையவர். அற்றார் பசியைத் தீர்ப்பதே தன் பொருளை வைக்கும் களம் என்றும் பகுத்துண்பவனை பசி அணுகாது என்றும் ஈதல் செய்ய முடியாத போது சாதலே மேலானது, இனிமையானது என்றும் ஈத்துவக்கும் இன்பத்தை ஈதலின் போதே அறியமுடியும் என்றும் பலவாறு ஈதலின் சிறப்பைக் குறிப்பிடுகின்றார்.

**மணிமேகலை காட்டும் ஈதலறம்:**

தமிழில் தோன்றிய முதல் சமயக் காப்பியமாகத் திகழும் மணிமேகலை பல அறக்கருத்துக்களை உரைக்கின்றது. அறங்களிலே சிறந்தது இவ்வுலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் உண்ண உணவளிப்பதே அறத்திலும் சிறந்த அறமாகும். எனவேதான் சாத்தனார் பசியைப் போக்கும் அறத்தை தலையாய அறமென்றும், அதிலும் உணவு கொடுத்தவர்கள் ஒருவருக்கு உயர்கொடுத்தவர் என்றும் கூறுவதை,

**"மண்டினி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"** (மணிகாதை-11-666)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

பௌத்த தருமத்தை மணிமேகலைக்கு உபதேசித்த அறவாண அடிகளும், மக்கள் தேவர் ஆகிய இருவர்க்கும் ஏற்ற முடிவான அறம் பசிப்பிணியொழிப்பதாகும் என்றும், அதுவே மிகப்பெரிய நல்லறம் என்று கூறியதை,

**"மக்கள் தேவர் என இரு சார்க்கும்**
**ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்,**
**பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்**
**தவப்பெரு நல்லறம் சாற்றினர்"** (மணி.காதை-12-115-118)

என வரும் பாடலை மூலம் அழகுற எடுத்துரைக்கின்றார். உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உயிர் வாழ இன்றியமையாத தேவையாய் விளங்குவது உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க இடமும் ஆகும். இவ்வரிய கருத்தினை முதன் முதலாக வற்புறுத்தி கூறியது மணிமேகலைக்காவியமாகும். உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றும் இல்லாதவனுக்கு கொடுத்து வாழ வேண்டும் என்பதை,

**“அறமெனப்படுவது யாது எனக் கேட்பின்**
**மறவாது இதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும், உடையும், உறையுளும் அல்லது கண்டது**

என்ற பாடலடிகளின் மூலம் குறிப்பிடுகின்றார்.

**திருமந்திரம் காட்டும் ஈதலறம்:**

அறத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது திருமந்திரம். உறவினர், நாடு, மொழி, நன்னெறி, உயர்வு, தாழ்வு, வறுமை, செல்வம், இளமை, முதுமை முதலிய எவ்வகை வேறுபாடுமின்றி உடலினுக்கு உணவும், உயிரினுக்கு உணர்வும் வேண்டினார்க்கு ஈதலும் உடையோர் கடமையாகும். உணவினை தக்கவராய் வந்த யாவருக்கும் மிக்க உவகையோடு இல்லை என்று கூறாமல் அவரவர் குறிப்பறிந்து தானம் செய்ய வேண்டும் என்பதை,

**“ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்**
**பார்ந்திருந்து உண்டின் பழம்பொருள் போற்றன்மின்**
**வேட்கை உடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்**
**காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே”**

(திருமந்திரம்.பா-107)

என்ற பாடலின் மூலம் குறிப்பிடுகின்றார். மேலும் அப்படி முடியவில்லையென்றால் கேள்வியிலும், வினையினும் பொருளாணும் இனிமை பயக்கும் இன் சொற்களைக் கூறி அறத்தின் மேன்மையை அடையலாம். “இரப்பவர்க்கு ஈய வைத்தார்,ஈபவர்க்கு அருளும் வைத்தார்” என்ற பழமொழியின் சொல்லாலும், செயலாலும் பிறர்க்கு துன்பத்தை விளைவிக்காமல் வேண்டும் போது உதவி செய்து வாழ்வதே சிறந்த அறமாகும்.

அறம் செய்யாமல் பிறர்க்கு இன்னல்களையே விளைவித்துக் கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டுதானே இருக்கிறார்கள் என்று சிலருக்குத் தோன்றும். அம்மகிழ்ச்சி “கானல் நீர் போன்றது” என்றறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அறஞ்செய்யார் அடையும் துன்பத்தினை திருமூலர்,

**“இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்**
**தருமஞ் செய்யாதவர் தம்போல தாகும்”** (திருமந்திரம்.பா-120)

என்ற பாடலடியின் மூலம் குறிப்பிடுகின்றார்.

**ஔவையார் காட்டும் ஈதலறம்:**

“அறம் செய விரும்பு” என்று பொதுநிலையில் அறத்தைக் குறிப்பிடுகின்றார். நாம் வாழ்ந்த காலத்தில் மக்கள் வறுமையில் வாடுவதைக் கண்டு மனம் வருந்தினார். வறுமை மிகக் கொடியது என்றும் அதிலும் இளமையில் வறுமை மிக மிகக் கொடியது என்றும் குறிப்பிடுகிறார். செல்வம் உடையவர்களுக்கு ஈகையைப்பற்றி எடுத்துச் சொல்லி அவர்களிடம் மனித நேயத்தை மலரச் செய்தும்,ஈகை புரியாதவர்களை இழித்தும் பழித்தும் கூறுகின்றார்.

மனிதன், பிறர் வறுமையுற்ற போதும், துன்புறும்போதும் தன்னால் இயன்ற பொருளுதவியைச் செய்தல் கடன் என வலியுறுத்துகிறார். இத்தகைய ஈகைகுணமின்மையால் அவன் சேர்த்த பொருளைத் தீயவர் கொள்ள நேரிடும் என்பதை,

**''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்''** (ஆத்திச்சூடி-4)

என்ற வரியின் மூலம் வலியுறுத்துகிறார். மேலும் அறம் செய்வதற்குப் பொருள் தேவை ஆனால் பொருள் நிலையற்றத் தன்மை உடையது. எனவே பொருள் இருக்கும் பொழுதே அறம் செய்க என்பதை,

**''ஆறிடும் மேடும் மடுவும் போல் ஆஞ்செல்வம்**
**மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறிடும்**
**தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக**
**உண்ணீரமை வீறும் உயர்ந்து''**
(நல்வழி.பா-32)

என்ற பாடலின் மூலம் வலியுறுத்துகிறார். மேலும்இத்தகு நற்செயல்களைச் செய்யாதவரை வன்மையாக கண்டிக்கிறார்.

அறச்செயல்களை, ஆறு வற்றி வறண்ட காலத்தும் ஊற்று நீரால் உலகத்தவரை உண்பிப்பது போல நற்குடிப்பிறந்தார் வறுமையிலும் உதவுவர். (நல்வழி.பா.9) என்பதையும் கூறி, மனமகிழ்ச்சியுடன் அறம் செய்கின்றவர்களுக்கு இலக்குமிதேவியானவள் எல்லாநலன்களையும் கொடுப்பாள் என்பதை,

**''நீரும் நிழலும் நிலம் பொழியும், நெற்கட்டும்**
**பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்**
**வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க்கு** என்றும்
**தரும் சிவந்த தாமரையாள் தான்''**(நல்வழி.பா.21)

என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

**புறநானூறு காட்டும் ஈதலறம்:**

சங்க இலக்கியங்கள் வீரத்தையும் காதலையும் போற்றிப்பாடுகின்றன. இவ்விலக்கியங்கள் வாழ்க்கையின் உண்மைகளை உள்ளது உள்ளவாறே படம் பிடித்துக் காட்டும் அறநெறிகளைப் போதிக்கின்றன. பழங்காலத்தில் உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தவர்களாக மதித்தனர். அறங்களிலே சிறந்தது ஒருவனுக்கு வயிறாற உணவிடுதலே ஆகும். இதனை,

**''நீரின்றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே''** (புறம்.பா-18)

எனக் குடப்புலவியனார் பாடுவதிலிருந்து அறியலாம்.

வறுமையைக் கண்டு மனம் இரங்கி யாசித்து வருவோர்க்கு வழங்குவோர் பலர் இருந்தாலும் யாசிக்காது வாழுகின்ற நிலையே உயர்ந்ததாகப் போற்றப்பட்டது. ஈயென இரத்தலின் இழிவினையும் கொள்ளெனக் கொடுத்தலின் உயர்வினையும்,

**''ஈயென இரத்தல் இழிந்தன்று அதனெதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று''**(புறம்.பா-204)

என்ற புறநானூற்று பாடல் மூலம் அறிய முடிகின்றது.

மன்னர்கள் தன்னை நாடி வந்த அந்தணர், புலவர், கூத்தர், பாணர், பொருநர், விறலியர், இரவலர் போன்றவர்களுக்கு வரையாது ஈந்தனர். வேதங்களைப் போற்றி வேள்வியியற்றும் அந்தணர்கட்கு பூவும், பொன்னும் நீர் வார்த்துத் தந்தனர் (புறம்-367). மன்னவர்கள் புலவர்களின் நைந்து கிழிந்த கந்தல் ஆடையை நீக்கி நல்ல ஆடை அணிமணிகளை வழங்கிக் கள்ளும் சூடான இறைச்சியும் தந்து! வறுமை தீர பொன், மணி, யானை, தேர், குதிரை போன்றவற்றை நல்கினர் என்பதை,

**"பெருஞ்சோறு** பயந்து பல்யாண்டு புரந்த

**பெருங்களிறு................................**"(புறம்.பா-220)

என்று சோழன் தன்னைப் புரந்த நிலையைப் பாடுகிறார் ஒரு புலவர்.

முடியுடை வேந்தரன்றி குறுநில மன்னரும், வள்ளல்களும் தங்களை நாடி வருபவர்களுக்கு வழங்கும் தன்மையை பெற்றிருந்தனர். அதியமான் நெடுமான் அஞ்சி தன்னைப் பாடிய ஔவைக்கு அருமையான சாகாத்தன்மை வாய்ந்த நெல்லிக்கனியை வழங்கினார் என்றும் குமணன் நாடிழந்த நிலையிலும் புலவரின் திறமையைப் பாராட்டி அதற்கு ஈடாகத் தன் தலையைக் கொடுத்து, தன் தம்பியிடம் பொருளைப் பெற்றுச் செல்லுமாறு கூறினான். (புறம் - 165) என்றும் புறநானூற்று பாடல் வழி அறிகிறோம்.

தலைவன் பொருளீட்டுவதற்காகப் பிரிந்து செல்லுங்காலை மகளிர் மனையிலே இருக்கும் பொழுது, தாங்களே ஈகையாளர்களாய்த் திகழ்ந்தனர். தலைவன் மலைப்பக்கத்து நெடுந்தொலைவு சென்றுள்ளபோதும் தலைவி பாடுநர்க்கப் பிடியானைகளை அளித்தனர் (புறம் - 151) என்றும் இரவலர்க்கு வரகும் தினையும் வழங்கினர். (புறம் - 333) என்றும் புறநானூற்று பாடல் வழி அறிய முடிகின்றது.

**தொகுப்புரை:**

"செல்வத்துப்பயனே ஈதல்" என்ற கருத்திற்கு ஏற்ப மன்னர்கள் முதல் மகளிர் வரை ஈகையாளர்களாக விளங்கினர். அறங்களில் சிறந்தது ஈதலறம் என்றும் அதிலும் பசிப்பிணி போக்குதல் மிகச்சிறந்த அறமாகவும் போற்றப்படுகிறது. 'அறம் செய விரும்பு' என்றும் 'இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர்' என்றும் ஔவையின் வாக்கிற்கேற்ப ஈதலின் சிறப்பையும், இரத்தலின் இழிவையும் சுட்டி, மக்களை நல்வழிப்படுத்தியுள்ள பாங்கினை அறிய முடிகின்றது. பண்டைய தமிழர்கள் அறவழியில் நின்று பொருளீட்டி, தானும் இன்பம் துய்த்து, பிறருக்கும் கொடுத்து மகிழ்ச்சியாக வாழ்நதனர். மறஉணர்வடன், அறவுணர்வு உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பதையும் இலக்கியங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது.